முன்பொருசமயம் தேவர்களுக்கும், அசுரர்களுக்கும் இடையே கடும் சண்டை நடைபெற்றபோது இவள் தேவர்கள் சேனையின் பக்கம் இருந்து உதவி புரிந்தால் தேவசேனை யென்றும் ஓர் பெயர் பெற்றாள். (இந்திரனின் மகளாகப் பிறந்து முருகப் பெருமானை திருப்பரங்குன்றத்தில் திருமணம் புரிந்த தேவயானை யென்பவள் வேறு இவள் வேறு) அப்போது அந்த தேவசேனைகளின் பதியாகத் திகழ்ந்த (தேவ சேனாபதி) முருகனுக்கு இந்த திதிதேவதையான சஷ்டி தேவி மிகவும் பிரியமுடையவளாக திகழ்ந்தாள். அதனால்தான் முருகனுக்கு சஷ்டி திதி மிகவும் விருப்பமுடைய திதியாக மாறியது.



சஷ்டி எனும் இந்த திதி தேவதையானவள் குழந்தை இல்லாப் பெண்களுக்கு குழந்தை வரம் தரும் ஓர் புத்ரபாக்ய தேவதையும் ஆவாள். இவள் பணி அதோடு மட்டும் நின்று போவதில்லை. மாதர்களுக்கு கரு உருவாக்குபவள், உருவாக்கிய கருவை உடனிந்து காப்பவள், அக்கரு சிறப்பாக வளர உதவி புரிபவள், பிறந்த அந்த சிசுக்களை பாலாரிஷ்ட தோஷங்கள் ஏற்படாமல் காப்பாற்றுபவள்.

அதனால் இந்த சஷ்டி திதி தேவதையை குழந்தை பாக்கியம் வேண்டி அக்கால மக்கள் வழிபட்டனர். இவளை பிரசவம் நடந்த வீட்டில் 6-வது நாளும், 21-வது நாளும் அவர்கள் வணங்கி பூஜித்துள்ளனர். அப்போது இவளை சம்பத் சொரூபிணியாக அவர்கள் வழிபடுவார்களாம்.

ஒரு சமயம் சுவாயம்புவ மனு எனும் மன்னனுக்கும், அவன் மனைவி மாலினி தேவிக்கும் வாரிசாக ஓர் ஆண் குழந்தையின்றி புத்ரதோஷம் இருந்தது. அவர்கள் சஷ்டி விரதமிருந்து சஷ்டி தேவியின் அருளால் 12 ஆண்டுகள் கழித்து புத்ரபாக்யமும் ஏற்பட்டது.

ஆனால் பூர்வ ஜென்ம கர்ம வினைகளால் அக்குழந்தை இறந்தே பிறந்தது. அதனால் அக்குழந்தையை மயானத்தில் கொண்டு சென்று புதைப்பதற்கு முன்பு அழுது புலம்பினர். அப்போது அங்கு நேரில் தோன்றிய சஷ்டி தேவி அக்குழந்தையிடம் சென்று அதனை எடுத்து தம் மார்போடு அணைத்து தம் இதழ்களால் முத்தமிட்டு அதை ஆசிர்வதித்தாள். உடனே இறந்த அக்குழந்தை உயிர் பெற்றெழுந்தது. இதனைக் கண்டு அரசனும், அரசியுடம் அவன் சேனைகளும் மகிழ்ச்சியுடன் ஆரவாரம் செய்தனர்.

அக்குழந்தைக்கு சுவிரதன் என்று பெயரிட்டழைத்த சஷ்டிதேவி, இவன் நெடுநாட்கள் சிரஞ்சீவியாக வாழ்ந்திருந்து ஆட்சி புரிவான் என்று ஆசீர்வதித்து அக்குழந்தையை சுவாயம்புவ மனுவின் மனைவி மாலினியின் கைகளில் தந்து மறைந்தாள்.

சுவிரதன் என்றால் நன்கு விரதம் அஷ்டித்ததால் பிறந்தவன் என்பது பொருளாகும். அதனால் தான் குழந்தை வரம் வேண்டும் அனைவருமே முருகப்பெருமானுக்கு மிகவும் பிரியமான தேவதையான இந்த சஷ்டி தேவியின் நாளில் சஷ்டி விரதமிருந்து முருகப் பெருமானையும் சஷ்டி திதி தேவதையையும் வழிபட்டு புத்ரபாக்கியம் பெறுவதோடு மற்றும் பல பெரும்பேறுகளையும் பெற்று மகிழ்கிறார்கள்.

### கந்த சஷ்டி விரதம் இருக்கும் முறை

ஒவ்வொரு ஆண்டும் ஐப்பசி மாதம் தேய்பிறை சதுர்தசி எண்ற 14-ம் நாளில் தீபாவளி வருகிறது. அன்றிரவு நரக சதுர்தசி நீராடல் என்று தீபாவளி கங்கா நீராடல் செய்கிறோம். மறுநாள் அமாவாசை வருகிறது.

இதற்குப் பிறகு வரும் வளர்பிறையில் பிரதமை, துவிதியை, திருதியை, சதுர்த்தி, பஞ்சமி, சஷ்டி எனும் ஆறு நாட்களில் கந்த சஷ்டி விரதம் அனுஷ்டிக்கப் படுகிறது. இதனை ஆண்டுக்கு ஆண்டு கந்தர் சஷ்டி சமயத்தில் 6 நாட்கள் மட்டும் அனுஷ்டிப்பவர்களும் உண்டு. இந்த கந்த சஷ்டி தொடங்கி மறு கந்த சஷ்டி வரை மாதாமாதம் வரும் சுக்ல சஷ்டியில் ஒரு வருடம் தொடர்ந்து விரதமிருப்பவர்களும் உண்டு.

இது போல 6 ஆண்டுகள் 12 ஆண்டுகள் என்று கணக்கு வைத்து தொடர்ந்து விரதம் அனுஷ்டிப்பவர்களும் உண்டு. இதில் மாதா மாதம் அமாவாசைக்குப் பிறகு வருவது சுக்லசஷ்டி என்று பெயர் பெறும். இதனை பூர்வட்ச சஷ்டி என்றும் கூறுவர்.

பவுர்ணமி கடந்த பின் வரும் சஷ்டி கிருஷ்ண சஷ்டி என்று பெயர் பெறும். இதனை அபரபட்ச சஷ்டி என்றும் கூறுவார்கள்.

### கந்த சஷ்டி விரதம் எவ்வாறு அனுஷ்டிக்கப்பட வேண்டும் என்று தெரியுமா?

ஐப்பசி மாதம் தீபாவளி அமாவாசைக்கு மறுநாள் வரும் பிரதமையன்று அதிகாலை எழுந்து ஆற்று நீரில் எதிர்முகமாகவும், குளம், கிணறு ஆகியவற்றில் வடக்கு நோக்கி நின்றும் தண்ணீரில் அறுகோணம் வரைந்து அதில் சடாட்சர மந்திரம் எழுதி இடையே பிரணவம் எழுதி, அந்தத் தண்ணீரைச் சிவகங்கையாகப் பாவித்து அதில் மூழ்க வேண்டும்.

தோய்த்து உலர்த்திய தூய ஆடையை அணிந்து இரவில் தம்பம், பிம்பம், கும்பங்களில் முருகனைப் பூஜித்து வெல்லம் சேர்த்து நெய்யில் சமைத்த மோகத்தை நிவேதித்து பிற உபசாரங்களும் செய்தல் வேண்டும். முருகன் சன்னிதி சென்று வலம் வந்து வணங்க வேண்டும்.

அன்று திருமுருகாற்றுப்படை, கந்த சஷ்டி கவசம், கந்தரலங்காரம், கந்தரந்தாதி, கந்தரனுபூதி, கந்த கலிவெண்பா, திருப்புகழ் ஆகியவற்றை ஆசாரத்துடன் ஓதி கந்தபுராணம் படிக்க வேண்டும்.

சூரசம்ஹாரத்தை விழாவாகக் கொண்டாட வேண்டும். அல்லது அவ்விழாவில் சென்று கலந்து கொள்ள வேண்டும்.

ஐந்து நாட்கள் நோன்பு இருந்து ஆறாம் நாள் சஷ்டியன்று நிராடி முருகனை வணங்கிப் பாரணம் செய்தல் வேண்டும்.

இரவு ஆறு வேளையும் 1008 நாமங்களால் அர்ச்சனை செய்து உறங்காமல் கந்தன் நினைவுடன் இருக்க வேண்டும். ஏழாம் நாள் சப்தமியன்று ஆறு அடியவர்களுக்கு அன்னம் அளித்து பாரணம் செய்தல் வேண்டும். இந்த ஆறு நாட்களும் உபவாசம் இருக்க முடியாதவர்கள் ஐந்து நாட்கள் பால் பழம் உண்டு சஷ்டியன்று முழு உபவாசமும் இருக்க வேண்டும்.

அவ்வாறு இருக்க முடியாதவர்கள் ஐந்து நாட்கள் உச்சி வேளையில் இறைவனுக்கு நிவேதித்த பால் பழங்களை உண்டு. இரவு உபவாசம் இருந்து ஆறாம் நாள் ஒரு நாள் மட்டுமாவது முழு உபவாசம் இருந்து வழிபட வேண்டும். தொடர்ந்து ஆண்டு முழுவதும் வரும் 24 சஷ்டிகளிலும் விரதம் அனுஷ்டிப்பது மிகவும் நல்லது.

முருகெபருமானுக்கும் சூரபதுமன் முதலான அசுர சேனைகளுக்கும் போர் நடந்தது அல்லவா? தேவர்கள் போர் நடந்த அந்த ஆறு நாட்களும் முருகப்பெருமானை வாழ்த்தி வணங்கினர். அந்த ஆறு நாட்களே கந்த சஷ்டி விரதமாகக் கொண்டாடப்படுகிறது.

## அதிகாலை 6 மணிக்கு முன்பே காப்பு கட்டிக் கொள்வது நல்லது

சஷ்டி விரதம் இருப்பவர்கள் நல்ல நேரத்தில் காப்புக் கட்டிக் கொள்வது அவசியமாகும். நாளை (சனிக்கிழமை) இரவு 8.06 மணி வரை பிரதமை உள்ளது. எனவே நாளை அதிகாலை 6 மணிக்கு முன்பே அதாவது சூரியஉதயத்துக்கு முன்பு காப்புக் கட்டிக்கொள்வது நல்லது. நாளை சஷ்டி விரதம் தொடங்கும் போது முருகர் படத்தை அலங்கரித்து வைத்து காப்புக் கட்டி விரதத்தை தொடங்கலாம். இல்லை யெனில் முருகரை கலசத்தில் ஆவாகனம் செய்து வழிபடலாம்.

காப்புக் கட்டும் முன்பு வீட்டில் உள்ள பெரியவர்களிடம் ஆசிப் பெற வேண்டும். அத்தகைய சூழ்நிலை இல்லாத பட்சத்தில் முருகரையே குருவாக ஏற்று காப்புக் கட்டிக் கொள்ளலாம். முருகருக்கு சிவப்பு மலர்களால் மாலை அலங்காரம் செய்வது நல்லது. நைவேத்தியமாக காய்ச்சிய பாலில் தேன் கலந்து வழிபடுவது உகந்தது.

# சஷ்டி விரத மகிமை



கந்த சஷ்டி விரதத்தை கடைபிடித்ததாலேயே நாரத முனிவர் மேலான பதவி பெற்றார். இவ்விரதச் சிறப்பினை விநாயகப் பெருமானே நாரத முனிவருக்கு எடுத்துரைத்தருளினார்.

முன்னவன் அதனைக் கோளா முழுதருள் புரிந்து நோக்கி அன்னது பெறுதி திண்ணம் ஆறுமா முகத்து நம்பி பொன்னடி வழிபாடாற்றிப் பொருவில்கார்த்திகை நாள் நோன்மைப் பன்னிரு வருடங்காறும் பரிவுடன் புரிதி என்றான்.

இப்படி ஆரல் நாளில் விரதத்தை இயல்பின் தோற்று முப்புவனத்தி வேண்டும் முறையை அடைந்த நீரார் மெய்ப்படு தொகையை யாரே விளம்புவார் என்று கந்தபுராணம் இவ்விரத்தைப் போற்றுகின்றது.

கந்த சஷ்டி விரதம் மேற் கொள்வோர் ஒரு கைத்தண்ணீரையே அருந்துதல், தருப்பையில் படுத்தல், கந்தபுராணம் படித்தல், கேட்டல், உறங்காது விழித்து இறைவனைச் சிந்தித்தல் ஆகியவற்றைத் தவறாது செய்து வழிபட வேண்டும். ஓர் ஏழை இவ்விரதமிருந்து மனு என்ற மன்னன் ஆனான்.

சஷ்டி விரதம் இருந்தால் நம் உள்ளத்தில் இறைவன் குடி கொள்வான் என்று பொருள்.

கந்த சஷ்டி நாளுக்கு முன் வரும் பிரதமை முதல் ஆறு நாட்களும் உமிழ் நீரும் உள்ளே விழுங்காதவாறு நோன்பிருந்து இவ்விரத்தை அனுஷ்டிப்பது ஒரு முறை.

அவ்வாறு இயலாதவர்கள் அந்நாட்களில் ஒரு முறை வீதம் ஆறு மிளகையும் ஆறு கை நீரையும் அருந்தலாம். உயிர் உணர்ச்சி வளர்க்கும் விரதம் இது. உண்ணாவிரதம் இருப்போர் போன்று உப்பு நீர், எலுமிச்சம் பழச்சாறு, நாரத்தம் பழச்சாறு, இளநீர் முதலியவற்றை இவ்விரதமிருப்போர் அருந்தக் கூடாது. இவ்விரத நாட்களில் விடியற்காலையில் எழுந்திருந்து, நாட் கடன்களை முடித்து, திருநீறணிந்து முருகவேளைத் தியானித்துப் பின் நீராடி, தோய்த்துலர்ந்த இரு ஆடைகளை அணிந்து, தம்பத்திலும், விம்பத்திலும், கும்பத்திலும் முருகவேளை வழிபட்டு இரவில் நெய்யில் சமைத்த மோதகத்தை நிவேதித்துப் பூசிக்க வேண்டும். ஏழாம் நாட்காலை விதிப்படிப் பூசித்துக் கந்தன் அடியார்களுடன் அமர்ந்து பாரணை செய்தல் வேண்டும் என்று கந்த புராணம் விதிக்கின்றது.

கந்தவேள் சூரபத்மனை வெற்றி கொண்ட நாளே கந்த சஷ்டி, நமது உள்ளத்தில் ஆட்சி செய்து வாழும் காமம் முதலியவற்றை வெற்றி கொண்டு வாகை சூடிப் பேரின்பம் எய்தும் குறிப்பே சூரசம்ஹாரத்தின் பொருளாகும். அதற்குரிய ஆன்மீக வீரம் பெற உதவுவதே கந்த சஷ்டி விரத மாகும்.

---

ஊத்துக்கோட்டையில் 2½ மாதத்துக்கு முன்பு மாயமானார்

# சென்னை கல்லூரி மாணவரை வெட்டி கொன்று ஏரியில் புதைத்த நண்பர்கள்

## 17 வயது சிறுவன் உள்பட 3 பேர் கைது


தினேஷ்

ஊத்துக்கோட்டை, நவ.1-

ஊத்துக்கோட்டை, ரெட்டி தெருவை சேர்ந்தவர் தனசேகர். கொத்தனார் வேலை செய்து வருகிறார். இவரது மகன் தினேஷ் (வயது 19). சென்னைவியாசர்பாடியில் உள்ள அம்பேத்கார் கல்லூரியில் பி. ஏ. தமிழ் முதலாம் ஆண்டு படித்து வந்தார்.

### மாணவர் மாயம்

கடந்த ஆகஸ்ட்டு மாதம் 20-ம் தேதி கல்லூரிக்கு சென்றவர் பின்னர் வீடு திரும்பவில்லை. அவரை நண்பர்கள் மற்றும் உறவினர்கள் வீடுகளில் பெற்றோர் தேடியும் கண்டுபிடிக்க முடியவில்லை. இதுகுறித்து ஊத்துக்கோட்டை போலீஸ் நிலையத்தில் புகார் செய்யப்பட்டது. போலீசார் வழக்கு பதிவு செய்து மாயமான கல்லூரி மாணவர் தினேசை தேடி வந்தனர். அவர் குறித்து கடந்த 2 1/2 மாதங்களாக எந்த தகவலும் கிடைக்காமல் இருந்தது.

இந்த நிலையில் ஊத்துக்கோட்டை துணை போலீஸ் சூப்பிரண்டு சாந்தி தலைமையில் இன்ஸ்பெக்டர்கள் தேவராஜ், தமிழ்ச்செல்வி, வெங்கடேசன் ஆகியோர் கொண்ட தனிப்படை போலீசார் தினேஷின் நெருங்கிய நண்பர்களான ஊத்துக்கோட்டை ரெட்டி தெருவை சேர்ந்த கார்த்திக்(24), காமராஜ் தெருவை சேர்ந்த நாகா (22) மற்றும் 17 வயது சிறுவனை பிடித்து விசாரித்தனர்.

### கொன்று புதைப்பு

அப்போது அவர்கள் ஊத்துக்கோட்டை ரோஜா தெருவை சேர்ந்த காமேஷ் என்பவருடன் சேர்ந்து கடந்த ஆகஸ்டு மாதம் 20-ந் தேதியே மாணவர் தினேசை வெட்டி கொலை செய்து விட்டு உடலை திருப்பதி அருகே உள்ள தாசுக்குப்பம் அடுத்த சென்னேரி ஏரிக்கரையில் புதைத்து விட்டதாக தெரிவித்தனர்.

இதையடுத்து கார்த்திக், நாகா, 17 வயது சிறுவன் ஆகிய 3 பேரை போலீசார் கைது செய்தனர். இந்த வழக்கில் தொடர்புடைய காமேஷ் வேறு ஒரு வழக்கில் கைதாகி புழல் சிறையில் உள்ளார்.

### உடல் தோண்டி எடுப்பு

இதைத்தொடர்ந்து தனிப்படை போலீசார் நேற்று காலை சத்தியவேடு தாசில்தார் சுப்பிரமணி முன்னிலையில் திருவள்ளூரில் உள்ள அரசு மருத்துவக் கல்லூரி ஆஸ்பத்திரி டாக்டர் சரவணகுமார் தலைமையில் ஏரியில் உடல் புதைக்கப்பட்ட இடத்தில் தோண்டினர்.

அப்போது தினேசின் உடல் எலும்புக்கூடாக இருந்தது. அங்கேயே பிரேத பரிசோதனை செய்து பின்னர் தினேசின் உடலை உறவினர்களிடம் ஒப்படைத்தனர். தினேசின் உடல் தோண்டி எடுக்கப்படுவது பற்றி அறிந்ததும் அங்கு ஏராளமானோர் திரண்டனர். அவர்கள் போலீசாருடன் கடும் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர். இதையடுத்து போலீசார் லேசான தடியடி நடத்தி அவர்களை கலைத்தனர். இதனால் அப்பகுதியில் பரபரப்பு ஏற்பட்டது.

### மதுகுடிக்கும்போது தகராறு

மாணவர் தினேசை கொலை செய்தது குறித்து கைதானவர்கள் அளித்த வாக்குமூலத்தில் கூறியிருப்பதாவது:-

கடந்த ஆகஸ்டு மாதம் 20-ந்தேதி கல்லூரிக்கு சென்று திரும்பிய தினேசுடன் நாங்கள் சென்னேரி ஏரிக்கு சென்றோம். அங்கு நாங்கள் 5 பேரும் சேர்ந்து மது குடித்தோம். போதை ஏறியதால் தினேசுக்கும் எங்களுக்கும் தகராறு ஏற்பட்டது. இதில் ஆத்திரம் அடைந்த காமேஷ் அரிவாளால் வெட்டியதில் தினேஷ் ரத்த வெள்ளத்தில் சம்பவ இடத்திலேயே துடிதுடித்து உயிர் இழந்தான். இதனால் நாங்கள் உடலை என்ன செய்வது என்று தெரியாமல் தவித்தோம். பின்னர் உடலை ஏரியிலேயே புதைக்க முடிவு செய்தோம். அதன்படி நாங்கள் ஆழமாக குழிதோண்டி தினேசின் உடலை அங்கேயே புதைத்து விட்டு வந்துவிட்டோம். பின்னர் தினேஷ் மாய மானது குறித்து அவரது குடும்பத்தினர் விசாரித்த போது எங்களுக்கு எதுவும் தெரியாதது போல் நடித்தோம். ஆனால் போலீசார் விசாரணை நடத்தி எங்களை பிடித்து விட்டனர்.

இவ்வாறு அவர்கள் கூறி உள்ளனர்.

கைது செய்யப்பட்ட கார்த்திக், நாகா, மற்றும் சிறுவனை போலீசார் ஊத்துக்கோட்டை கோர்ட்டில் ஆஜர் படுத்தினர். பின்னர் கார்த்திக், நாகா ஆகியோரை புழல் சிறையிலும், சிறுவனை சென்னை கெல்லீசில் உள்ள சிறார் சீர்திருத்தப் பள்ளியிலும் அடைத்தனர்.

குடி போதை தகராறில் கல்லூரி மாணவரை நண்பர்களே வெட்டி கொன்று ஏரியில் புதைத்த சம்பவம் ஊத்துக்கோட்டை பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

தமிழ்நாடு அரசு
**கிள்ளியூர் முதல்நிலை பேரூராட்சி-கன்னியாகுமரி மாவட்டம்.**

ந.க.எண். 26/2024 — **ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு** — நாள்: 30.10.2024

கிள்ளியூர் முதல்நிலை பேரூராட்சியில் நபார்டு நிதி உதவி திட்டம் (NABARD (RIDF-XXX) 2024-2025 கீழ் ரூ.118.00 இலட்சம் மதிப்பீட்டில் கல்லுவிளை - பொற்றவிளை சாலை மற்றும் காட்டுக்குழி பயணிகள் நிழலகம் முதல் காவுகுளம் சாலை தார் தளம் அமைத்து மேம்பாடு செய்தல் பணி செய்திட ஒப்பந்தப்புள்ளிகள் (இரண்டு உறைகள் முறை) வரவேற்கப்படுகின்றன.

1. ஒப்பந்தப்புள்ளி நமூனாவினை **https://tntenders.gov.in** என்ற இணையதள முகவரிகளிலிருந்து இலவசமாக எடுத்துக்கொள்ளலாம். மேலும் ஒப்பந்தப்புள்ளிகள் குறித்த முழு விபரங்களும் பெறலாம்.
2. ஒப்பந்தப்புள்ளிகள் தொடர்பான நேரம் மற்றும் நாள் :
   அ) ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பித்தல் - **13.11.2024** மாலை **3.00** மணி வரை
   ஆ) ஒப்பந்தப்புள்ளி திறத்தல் - **13.11.2024** மாலை **3.30** மணி
3. ஒப்பந்தப்புள்ளி பெறப்படும் நாளன்று அலுவலகத்திற்கு விடுமுறை தினமாக அறிவிக்கப்படின் அதற்கு அடுத்த வேலை நாளில் அதே நேரத்தில் அதே இடத்தில் ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டு திறக்கப்படும்.

செயல் அலுவலர்
கிள்ளியூர் முதல்நிலை பேரூராட்சி
கன்னியாகுமரி மாவட்டம்.

செ.ம.தொ.இ./ 4697 /ஒப்பந்தப்புள்ளி/2024

ஆவடி அருகே

## ரெயில் பயணியிடம் நகை பறித்த வாலிபருக்கு 3 ஆண்டு ஜெயில்


நாகராஜ்

ஆவடி,நவ.1-

ஆவடியை சேர்ந்தவர் ஸ்மித்தா. இவர் தனது மகளை கோயம்புத்தூர் ரெயில் ஏற்றிவிட ஆவடியில் இருந்து மின்சார ரெயிலில் சென்ட்ரல் நோக்கி சென்றார். அண்ணனூர் ரெயில்நிலையத்தில் நின்றுவிட்டு மின்சார ரெயில்மெதுவாக புறப்பட்ட போது நடைமேடையில் நின்ற மர்ம நபர் திடீரென ஜன்னல் ஓரம் அமர்ந்திருந்த ஸ்மித்தா கழுத்தில் இருந்த நகையை பறித்து தப்பி சென்றுவிட்டான். இதுகுறித்து பெரம்பூர் ரெயில்வே போலீசார் வழக்குப்பதிவு செய்து பெண்பயணியிடம் நகை பறித்த பட்டாபிராம் காந்திநகரை சேர்ந்த நாகராஜ் என்பவரை கைது செய்தனர். இந்த வழக்கு விசாரணை பூந்தமல்லி குற்றவியல் நடுவர்-2 நீதிமன்றத்தில் நடந்துவந்தது. விசாரணை முடிந்து நீதிபதி தீர்ப்பளித்தார். இதில் குற்றவாளி நாகராஜிக்கு 3 ஆண்டுகள் கடுங்காவல்தண்டணையும், ரூ.10 ஆயிரம் அபராதமும் விதித்தார். மேலும் மனுதாரருக்கு ரூ.50 ஆயிரம் நஷ்டஈடும் 3 மாதத்தில் வழங்க வேண்டும் என்று உத்தரவிட்டார். இந்த வழக்கில் விரைவாக சிறப்பாக செயல்பட்ட இன்ஸ்பெக்டர் பத்மநாபனை ஏ.டி.ஜி.பி. ஜெயராமன், போலீஸ் சூப்பிரண்டு ஈஸ்வரன் பாராட்டினர்.

## எல் ஃபோர்ஜ் லிமிடெட்

ELFORGE

பதிவு அலுவலகம் : 1A, ஸ்ரீ பெரும்புதூர் நெடுஞ்சாலை (வழி) சிங்கபெருமாள் கோயில், ஆப்பூர் கிராமம், காட்டாங்குளத்தூர் ஒன்றியம், செங்கல்பட்டு மாவட்டம் - 603 204. போன் : (044) 47112500, டெலிபேக்ஸ் : (044) 47112523
இ மெயில் : edf@elforge.com CIN : L34103TN1934PLC000669
நிறுவன அலுவலகம் : கதவு எண் 21C, ஏ.ஆர்.கே. காலனி, எல்டாம்ஸ் ரோடு, ஆழ்வார்பேட்டை, சென்னை - 600 018
போன் : (044) 24334010/11 இ மெயில் : edf@elforge com

**30.09.2024 அன்று முடிவடைந்த காலாண்டிற்கான தணிக்கை செய்யப்படாத தனித்த நிதிநிலை முடிவுகளின் சுருக்கம்**

(ரூ. இலட்சத்தில்)

| வ.எண் | விபரங்கள் | முடிவடைந்த காலாண்டு 30.09.2024 த. ஆகாதது | முடிவடைந்த காலாண்டு 30.06.2024 த. ஆகாதது | முடிவடைந்த காலாண்டு 30.09.2023 த. ஆகாதது | முடிவடைந்த அரையாண்டு 30.09.2024 த. ஆகாதது | முடிவடைந்த அரையாண்டு 30.09.2023 த. ஆகாதது | முடிவடைந்த ஆண்டு 31.03.2024 த. ஆனது |
|---|---|---|---|---|---|---|---|
| 1. | செயல்பாடுகள் மூலம் வருமானம் (நிகர) | 2,078.91 | 1,706.66 | 1,779.10 | 3,785.57 | 3,608.46 | 6,872.76 |
| 2. | சாதாரண நடவடிக்கைகள் மூலம் வரிக்குப்பின் நிகர லாபம் / (நஷ்டம்) | 72.96 | 45.92 | 69.54 | 118.89 | 177.60 | 306.35 |
| 3. | இக்காலத்திற்கான நிகர லாபம் / (நஷ்டம்) வரிக்கு பின் (விதிவிலக்கான இனங்களுக்கு பின்) | 72.96 | 45.92 | 39.54 | 118.89 | 87.60 | 7,112.20 |
| 4. | செலுத்தப்பட்ட சமபங்கு மூலதனம் (ஒரு பங்கின் முகமதிப்பு ரூ.10) | 2,032.43 | 2,032.43 | 2,032.43 | 2,032.43 | 2,032.43 | 2,032.43 |
| 5. | பேலன்ஸ்ஷீட் படிமறுமதிப்பீட்டு ரிசர்வுகள் நீங்கலான ரிசர்வு | 118.57 | 45.60 | (8,241.14) | 118.57 | (8,241.14) | (0.32) |
| 6. | பங்கு ஒன்றின் வருவாய் முந்தைய விதிவிலக்கான வகைகள் ரூ (ஆண்டு விகிதம் செய்யவில்லை) | | | | | | |
| | அ) அடிப்படை | 0.36 | 0.23 | 0.34 | 0.58 | 0.87 | 1.51 |
| | ஆ) குறைமதிப்பு | 0.36 | 0.23 | 0.34 | 0.58 | 0.87 | 1.51 |
| 7. | பங்கு ஒன்றின் வருவாய் பிந்தைய விதிவிலக்கான வகைகள் ரூ (ஆண்டு விகிதம் செய்யவில்லை) | | | | | | |
| | அ) அடிப்படை | 0.36 | 0.23 | 0.19 | 0.43 | 34.99 | 0.58 |
| | ஆ) குறைமதிப்பு | 0.36 | 0.23 | 0.19 | 0.43 | 34.99 | 0.58 |

குறிப்பு: 1. செப்டம்பர் 30, 2024 இல் முடிவடைந்த காலாண்டுக்கான தணிக்கை செய்யப்படாத நிதி முடிவுகளின் விரிவான வடிவத்தின் சுருக்கம்,SEBI (பட்டியல் மற்றும் கடமைகள் மற்றும் வெளிப்படுத்தல் தேவைகள்) விதிமுறைகள் 2015 இன் விதிமுறை 33 இன் கீழ் பங்குச் சந்தையில் தாக்கல் செய்யப்பட்டது.
2. கூறப்பட்ட முடிவுகளின் முழு வடிவம் BSE Limited இன் இணையதளத்தில் (www.bseindia.com) மற்றும் நிறுவனத்தின் இணையதளமான www.elforge.com. இல் கிடைக்கும்.
3. தணிக்கைக் குழுவால் முறையாக மதிப்பாய்வு செய்யப்பட்ட மேற்கண்ட முடிவுகள், அக்டோபர் 30, 2024 அன்று நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் இயக்குநர்கள் குழுவால் அங்கீகரிக்கப்பட்டுள்ளன.

தேதி : 30.10.2024
இடம் : சென்னை

குழுவிற்காகவும் அதன் சார்பாகவும்
K.V. ராமசந்திரன்
துணை தலைவர் மற்றும் நிர்வாக இயக்குனர்
DIN: 00322331



## எப்எல்ஓ புடவை கட்டுதல் கலை

FLO சென்னை சார்பில் அதன் தலைவர் திவ்யா அபிஷேக் தலைமையில் 'புடவை கட்டுதல் கலை: பாரம்பரியம் மற்றும் படைப்பாற்றலை கலத்தல்' என்ற தலைப்பில் புடவை கட்டும் நிபுணர் டோலி ஜெயின் பங்கேற்ற நிகழ்வை சென்னையில் நடத்தியது. FLO சென்னை இணை செயலாளர் அமுல்யா ராவ் அட்லூரி நெறிப்படுத்தினார். இதில் 400-க்கும் மேற்பட்டோர் பங்கேற்றனர். கலைத்திறனை கொண்டாடுவதன் மூலம் பெண்களுக்கு அதிகாரம் அளிக்க திவ்யா அபிஷேக் தலைமையிலான FLO சென்னையின் தொடர்ச்சியான முயற்சிகளின் ஒரு பகுதியாக இந்த நிகழ்வு இருந்தது.



## கேவிபியின் புதிய கிளை

கரூர் வைஸ்யா வங்கியின் (கேவிபி) புதிய கிளை திருவான்மியூரில் தொடங்கப்பட்டுள்ளது. எண்:38, வால்மீகி தெரு, திருவான்மியூர் என்ற முகவரியில் அமைந்திருக்கும் இக்கிளையை தமிழ்நாடு அரசின் ஆதிதிராவிடர் நலத்துறை அதிகாரி டி.ஆனந்த் திறந்து வைத்தார். கே.ஆர்.புரம் (பெங்களூர்), இரணியல் (கன்னியாகுமரி), மங்கலம் (திருப்பூர்) ஆகிய இடங்களிலும் கேவிபி புதிய கிளைகளை தொடங்கியுள்ளது. KVB DLite என்ற மொபைல் செயலியின் மூலம் 150-க்கும் அதிகமான நிதி மற்றும் நிதி அல்லாத சேவைகளை கேவிபி வழங்குகிறது.

**PUBLIC NOTICE**

My clients, Mr. M.P. Sidheeque, Mr. T. Abdul Razak, Mr. M.P.Shafeeque, Mr.T.Musthafa and Mr.P.Abdul Khadar are the absolute owners of the property being the Land and building, land of an extent of 2323 sq.ft., as per measurement, 233 sq.mts., (2400 sq.ft., approx.), as per Patta, less land Acquired for Road widening by National Highways Department of an extent of 46 sq.mts., (495 sq.ft., approx.,), Present Extent of land measuring 1905 sq.ft., comprised in S.No.136/1-C, T.S.No.27, as per Patta T.S.No.27/3, Block No.12 of Kottur Village (Sri Ram Nagar) bearing Old Door No.37, Elliots Beach Road, also known as Guindy Road, Old No.7, Presently New Door No.52, Sadar Patel Road, Adyar, Chennai – 600113.

Certain documents of the property being, Original Sale Deed dated 24.10.2001 (Doc.No. 1932/01, S.R.O – Adyar), Original Sale Deed dated 30.10.2001 (Doc.No. 1959/01, S.R.O – Adyar), Sale Deed dated 02.01.2002 (Doc.No.4/02, S.R.O – Adyar), Original Sale Deed dated 02.01.2002 (Doc.No. 5/02, S.R.O – Adyar), Original Sale Deed dated 02.01.2002 (Doc.No. 6/02, S.R.O – Adyar), Original General Power of Attorney dated 30.10.2001 (Doc.No. 1340/01, S.R.O – Adyar) and Original Approved Plan for Demolition and Reconstruction were misplaced. The said property is in the possession of my clients and it is absolutely free from any encumbrance whatsoever. Any person having custody of the said original documents or has any claim or interest over the said property, he/she is requested to forward their claims along with the relevant documents to me within 7 days of this Public Notice.

If I do not receive any claim from any person within 7 days, it will be strictly presumed that this property is absolutely free from any claim or encumbrance and no one has any claim over this property.

G. HARIDASS, Advocate
New No.4, Old No.32,
Madurai Veeran Koil Street,
T. Nagar,Chennai – 600 017.
Ph.: 044-4855 5037 / 28242425

**IN THE COURT OF THE HON'BLE ADDITIONAL DISTRICT JUDGE AT CHENGALPATTU**
**O.S. NO: 724 OF 2023**

Mr.Damodharan :Plaintiff
Vs
Mr. S. Chakravarthy & others :Defendants

அறிவிப்பு

மேற்படி 5வது பிரதிவாதியின் கடைசியாக தெரிந்த முகவரி திருமதி. ராணி அம்மாள் (D 5), த/பெ. திரு. சீதாபதி, க/பெ. திரு. ராதாகிருஷ்ணன், எண்.22, பெருமாள் கோவில் தெரு, தென்னேரி வழி - 631 604, இதனால் மேற்படி பிரதிவாதி அறிவது யாதெனில் வாதி பாகப்பிரிவினை கோரி தாக்கல் செய்துள்ள வழக்கானது மேற்படி கோர்ட்டார் சமூகத்தில் 09.01.2025 அன்று வாய்தா போடப்பட்டுள்ளது. தாங்கள் நேரடியாகவோ அல்லது தங்களின் வழக்கறிஞர் மூலமாகவோ அன்று காலை 10.30 மணியளவில் ஆஜர் ஆகவேண்டி உள்ளது. தவறும் பட்சத்தில் வழக்கானது உங்களுக்கு எதிராக ஒருதலைபட்சமாக தீர்ப்பாகும் என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

கே.ரகுராஜ்
வாதியின் வழக்குரைஞர்

மாண்பமை மாவட்ட முதன்மை நீதிமன்றம் திருவள்ளூர்
**GWOP.No.319/2024**

மைனர் திதிக்க்ஷா ராவ், (பெ/6)
வழக்கு
P.நந்தினி (பெ/32), த/பெ.பிரகாசம்
எண்.74, பிரதான சாலை,
ஜெயாநகர், திருவள்ளூர்-602001.
...மனுதாரர்

-எதிர்-

சுசிகர் ராவ் (ஆண்/33),
த/பெ.மோகன் ராவ்,
எண்.H 11/24,TNHB நான்காம் தெரு,
அஞ்சுகம் நகர், கொளத்தூர்,
சென்னை-600099.
...எதிர்மனுதாரர்

மேற்படி இளவர் திதிக்க்ஷா ராவ் (பெ/6) அவர்களுக்கு மனுதாரர் நந்தினி அவர்களை கார்டியனாக நியமிக்க கோரி மேற்படி மனுதாரர் மனுவை மேற்படி நீதிமன்றத்தில் தாக்கல் செய்து உள்ளார். மனுவானது வருகிற 10.12.2024-ஆம் தேதி அன்று ஆட்சேபனைக்காக வாய்தா போடப்பட்டுள்ளது. அதில் யாருக்கேனும் ஆட்சேபனை இருந்தால் மேற்படி நீதிமன்றத்தில் மேற்படி தேதியில் காலை 10.30 மணிக்கு ஆஜராக வேண்டியது.

M.Ravindran Bsc.,B|
V.Vanitha B.Com.,Llb
E.Ilankumaran BA.,BL
J.Valarmathi BBA.,BL
மனுதாரரின் வழக்கறிஞர்கள்.

**IN THE COURT OF THE ADDITIONAL SUBORDINATE JUDGE, CHENGALPATTU**
I.A.No.2 of 2023 and I.A.No.3 of 2023 and I. A. No.4 of 2023
in
I. A. No.87 of 2019
in
O. S. No.36 OF 2014

Mr. G. Somasundaram (died) and others ...Petitioners/Plaintiff/Proposed plaintiffs
-Vs-
Mr. Selvaraj and another ...Respondents/defendants

To
1. Mr. R. Selvaraj,
son of Mr. Rakasamy Reddiar, Residing at No.11/33, Bajanai Koil Street, Near Sruthi Musicals, Vadapalani, Chennai-600 026
2. Mrs. Salima Banu,
wife of Mr. Sulthan Ibrahim,
Residing at Door No.32, J.C.Nagar,
3rd Street, Shimoga district officially known as Shivamogga District, Karnataka State-577 201
...Respondents/defendants

Sub: I.A.No.2 of 2023 and I.A.No.3 of 2023 and I.A.No.4 of 2023 in I.A.No.87 of 2019 in O.S.No.36 OF 2014, pending on the file of the Honourable Additional Subordinate Judge, Chengalpattu-reg.

Kindly take notice that the petitioners, who are the legal heirs of deceased plaintiff Mr. Somasundaram, have filed the said applications to condone the delay in taking steps, set-aside the abatement and to implead them as parties to the suit proceedings. The said applications have been duly numbered as I.A.No.2, 3 and 4 of 2023 respectively and posted to 19.11.2024 for your appearance. As directed by the said Honourable Court, this notice. Thus, please take notice and appear before the Court on 19.11.2024, at 10.30 a.m. through in person or through counsel before the said Honourable Court without fail. Failing which, the matter will be decided as per court of law.

R VENKATESH AND S. RAJESH
ADVOCATES

மாண்புமிகு தலைமை நீதிதுறை நடுவர் நீதிமன்றம், மதுரை.
M.C.O.P.No.1104/2023

வீரம்மாள், க/பெ.ஆறுமுகம், No.11A, அம்மலம்மாள் காம்பௌண்ட், வைகை வடகரை, தல்லாக்குளம், மதுரை-625 002.
-மனுதாரர்

M.மனேஷ்குமார், S/o.முத்து ராஜ் மாணிக்கம், எண்.217.A விஜய லட்சுமி நகர், குமணச்சாவடி, கண்டோன்மெண்ட், பூந்தமல்லி, சென்னை-600 058.
-1-ம் எதிர்மனுதாரர்

மேற்படி மனுதாரர் நஷ்டஈடு கோரி தாக்கல் செய்திருக்கும் வழக்கில் மேற்படி 1-ம் எதிர்மனுதாரர் ஆஜராக 15.11.2024 தேதி வாய்தா ஏற்பட்டிருக்கிறது. சமூகம் கோர்ட்டில் தாங்கள் காலை 10.00 மணிக்கு நேரிலோ அல்லது தங்களது வழக்கறிஞர் மூலமாகவோ ஆஜராகி ஆட்சேபனையை தெரிவித்துக் கொள்ள வேண்டியது. தவறினால் ஒரு தலைபட்சமாக தீர்மானிக்கப்படும் என்று இதன் மூலம் அறிவிக்கலாயிற்று."

P.விஜய்,
வழக்கறிஞர், மதுரை.

சார்பு நீதிமன்றம். தாம்பரம்
ஓ.எஸ்.எண்.71/2024

P.சகுந்தலா ...வாதி
-எதிர்-
போபென் சாமுவெல் ...பிரதிவாதி

போபென் சாமுவேல்
உரிமையாளர், ஆபிராமி மெடிக்கல்ஸ் கடை எண்.E,
புதிய எண்.187/A (பழைய எண்.257-A), வேளச்சேரி மெயின் ரோடு,
கிழக்கு தாம்பரம்-600059

மேற்கண்ட அசல் வழக்கில் எதிர்மனுதாரராகிய உங்களுக்கு எதிராக தொடரப்பட்ட வழக்கில் 20.9.2024 அன்று இந்த மனுவின் மீது எதிர்மனுதாரர் ஆகிய நாங்கள் மேற்கண்ட நீதிமன்றத்தில் ஆஜராவதற்காக இந்த வழக்கு 4.11.2024 அன்று வாய்தா போடப்பட்டுள்ளது. எனவே அன்று காலை 10.30 மணியளவில் மேற்கண்ட நீதிமன்றத்தில் தாங்கள் அல்லது தங்கள் வழக்கறிஞர் யாரேனும் ஆஜராகும்படி தங்களுக்கு இதன் மூலம் தெரிவித்துக் கொள்கிறோம்.

ஆ.பழனியப்பன்,
வாதி வழக்குரைஞர்.

பாண்டிச்சேரி குடும்ப நல நீதிமன்றம் (Family Judge Court) கோர்ட்
MOP No.202/2024

S. பத்மபிரியா,
த/பெ. R. ஷண்முகசுந்தரம்
2, 1-வது மெயின் ரோடு,
2-வது கிராஸ், நயினார்மண்டபம்,
பாண்டிச்சேரி-4. -மனுதாரர்

எதிர்

V. வினோத்,
த/பெ. S.V. வெங்கடேஷ்,
15, ஸ்ரீராம் நகர் காலனி,
ஸ்ரீராம் நகர், தரமணி,
சென்னை-600 113. -எதிர்மனுதாரர்

எதிர்மனுதாரருக்கு MOP மனுவில் நோட்டீஸ்

மேற்படி மனுதாரர் உங்கள்மீது, விவாகரத்து கோரி செய்ய தாக்கல் செய்துள்ள மேற்படி MOP மனு உங்களின் ஆஜருக்காக மேற்படி பாண்டிச்சேரி குடும்ப நல நீதிமன்றம் (Family Judge Court) கோர்ட்டில் வருகிற 22.11.2024 அன்று காலை 10 மணிக்கு வைக்கப் பட்டுள்ளது. அது சமயம் நீங்கள் மேற்படி கோர்ட்டில் நேரடியாகவோ அல்லது வழக்கறிஞர் மூலமாகவோ ஆஜராக வேண்டியது. தவறும்பட்சத்தில் மனுவில் மனுதாரர் கேட்டுள்ளபடி உத்திரவிடப்படும் என்பதை அறியவும்.

மனுதாரர் வழக்கறிஞர்,
D. SUKUMARAN, M.L.,
Advocate, Puducherry.